**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.61/2026**

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாரதிராஜன் | Father's Name | : | பொன்னையன் |
| Village | : | திருத்துறைப்பூண்டி | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 04th day of August 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் குடவாசல் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது கடந்த 10.11.2023 அன்று காலை 9.30 மணிக்கு நானும், 2 ம்நிலை காவலர் குருசீலன் மற்றும் ஆய்வாளருடன் மதுவிலக்கு ரோந்து சம்மந்தமாக குடவாசல் காவல் சரகம் பெரும்படுகை அருகே கண்காணித்து வந்தபோது அங்கு குடுகாடு அருகே நின்று கொண்டிருந்த நபர் போலீசாராகிய எங்களைகண்டதும் தப்பி ஓட எத்தனித்தவரை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.04 14:57:37 +0530

பிடித்து விசாரிக்க அவர் தன் பெயர் கேசவன், த/பெ. வீரபத்திரன், வஉசி தெரு, பெரும்படுகை, வீதிவிடங்கன், நன்னிலம் தாலுகா என சொன்னார். அவர் குற்றவாளி என்பதால் அவர் நின்ற இடத்தை சோதனை செய்து பார்க்க சுமார் 15 லி. பிடிக்க கூடிய 11 பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் 110 லி. பாண்டி சாராயம் இருந்தது. அந்த சாராயத்தை எடுத்து பார்க்க அது ஒரு வழக்கத்திற்கு மாறான நிறமும் முகர்ந்து பார்க்க ஒருவித விஷ நெடியுடன் கூடிய கெட்ட வாடையும் வீசியது. மேற்படி விஷ நெடியுடன் கூடிய பாண்டி சாராயத்தை வைத்திருக்க அவரிடம் எவ்வித உரிமமோ அனுமதியோ இல்லையென கூறியதால் மேற்படி எதிரியை காலை 10.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தும், போன் மூலம் அவரது மனைவிக்கு தகவல் தெரிவித்தும் மேற்படி விஷ நெடியுடைய பாண்டி சாராயத்தை அருந்துபவர்களின் உயிருக்கும் உடலுக்கும் கேடு விளைவிக்க கூடும் என்பதால் எதிரி வைத்திருந்த தடயத்தை மகஜரில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் காவலராகிய எங்கள் முன்னிலையில் 10.30 மணிக்கு மகஜர் தயார் செய்து ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் காவலர் குருசீலன் 2 வது சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம். தடயத்திலிருந்து மாதிரிக்கு சுமார் 750 மிலி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.04 14:57:44 +0530

பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் பாண்டி சாராயத்தை எடுத்து அடைத்து SHO சீல் வைக்கப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆகவும் 2 கண்ணாடி பாட்டில்கள் சா.பொ.1 வரிசையாகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 11.00 மணியளவில் அதே இடத்தில் மாதிரிக்கு எடுக்கப்பட்ட பாண்டி சாராயம் போக மீதமுள்ள 109 லி. பாண்டி சாராயத்தை Sec.32 TNP Act ன்படி அழிப்பு மகஜர் தயார் செய்தார். அந்த அழிப்பு மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் காவலர் குருசீலன் 2 வது சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம் அந்த அழிப்பு மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் காவலர் குருசீலன் 2 வது சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5**. பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்வதற்கு நான் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.04 14:57:51 +0530

**குறுக்கு விசாரணை**

நாங்கள் ரோந்து பணிக்கு செல்லும்போது ஆஜர் எதிரியை பெரும்படுகை சுடுகாட்டிற்கு அருகில் பார்த்தோம். பெரும்படுகையில் எத்தனை சுடுகாடு உள்ளன என்று எனக்கு தெரியாது. அந்த ஊரில் 4 சுடுகாடுகள் உள்ளன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் ஆய்வாளருடன் பார்ட்டி சகிதம் ரோந்து பணிக்கு ஜீப்பில் சென்றோம். கணினி மூலமாக பதிவாகியுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து கணினியில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. நிலைய எழுத்தர்தான் அதனை கணினியில் பதிவு செய்தார். அ.சா.ஆ.3 எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவம் நிகழ்ந்ததாக சொல்லப்படும் இடத்தில் தயார் செய்யப்பட்டது. நாங்கள் எதிரியை கைது செய்ய போகும்போது அந்த ஊர் மக்கள் கூட்டமாக வேடிக்கை பார்த்தார்கள் என்றால் ஆமாம். ஊர் மக்கள் யாரும் சாட்சியாக கையொப்பம் போடவில்லை என்றால் சரி. நான் சொல்வதுபோல் பெரும்படுகை சுடுகாட்டிற்கு நாங்கள் செல்லவில்லை எனவும் எதிரியை நாங்கள் கைது செய்யவில்லை எனவும் எதிரி தாமாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை எனவும் எதிரியிடமிருந்து தடய பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. புள்ளி விபர

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.04 14:57:57 +0530

கணக்கிற்காக போடப்படும் வழக்கில் மேலதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் ஒரு சாட்சியமாக ஜோடிக்கப்பட்டுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.04 14:58:04 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.